புரட்சிப்
பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • நவம்பர் (NOVEMBER) 05, 2026 • புரட்சி 26 • முழக்கம் (ISSUE) 46 • விலை(PRICE) ரூ.6.00

தேவாரம் பாடல்களை அழிக்க தில்லை தீட்சிதப் பார்ப்பனர்கள் நடத்திய சதி

சிதம்பரம் கோயில் சைவ சமயக் குறவர் நால்வராலும் பாடல் பெற்ற தலம். பாடல்கள் என்றால் தேவாரப் பாடல்கள்தான். அவை வெறும் பாடல்கள் அல்ல. சைவர்களுக்குத் தமிழ்மறை! அந்தப் பாடல்களை நியாயமாகத் தில்லை வாழ் அந்தணர்கள் பாதுகாத்திருக்க வேண்டும். ஆனால் பாதுகாக்கவில்லை! இறைவனைவிட கரையான் மேல் பற்று அதிகம்போல் தெரிகிறது. தேவாரப் பாடல்களை அறையில் பத்திரமாகப் பூட்டி வைத்து கரையானுக்கு உணவாக்கினர்.

அந்தக் காலங்களில் எழுத்துகள் எல்லாம் வடிக்கப்படுவது ஓலைச் சுவடிகளில்தான். ஓலைச் சுவடிகள் மலிவுப் பதிப்பும் அல்ல; சந்தையில் கிடைக்கக்கூடியதும் அல்ல. கோயில்களிலும், மடங்களிலும் மற்றும் முக்கிய சைவ நெறிப்பற்றாளர்களிடம் மட்டுமே கிடைக்கக்கூடிய தேவாரப் பாடல்களின் ஓலைச் சுவடிகள் எல்லாம் சிதம்பரம் கோயிலில் இருந்தன. ஆனால் தில்லை வாழ் தீட்சதப் பார்ப்பனர்கள் அவற்றை யாருக்கும் கொடுப்பதில்லை

தேவாரப் பாடல்களைக் கேட்டு ரசித்த ராஜராஜ சோழன் அப்பாடல்களைத் திருமுறைகளாகத் தொகுக்கும் பொறுப்பை நம்பியாண்டார் நம்பியிடம் ஒப்படைத்தான். எல்லாப் பாடல்களும் சிதம்பரம் கோயிலில் முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்த சோழ மன்னன் தில்லைவாழ் பார்ப்பனர்களிடம் தேவாரப் பாடல்களை விடுவிக்குமாறு கேட்டான். தில்லைவாழ் பார்ப்பனர்கள் மறுத்துவிட்டனர்.

சம்பந்தரும், அப்பரும், சுந்தரரும் வந்து கேட்டால்தான் கொடுக்க முடியும் என்று ஆளும் மன்னனுக்கே போக்குக் காட்டினர். இந்தத் தந்திரங்களைப் புரிந்து கொண்டான் சோழ மன்னன். சம்பந்தர், அப்பர், சுந்தரர் போல் சிலைகள் செய்து, தில்லை வாழ் பார்ப்பனர்கள் முன் நிறுத்தி தேவாரப் பாடல்களைக் கேட்டான். “இவையெல்லாம் சிலை தானே” என்றார்கள் கோயில் பார்ப்பனர்கள். ராஜராஜசோழன் பதில் சொன்னான். “நடராசரும் சிலை தானே?” பிறகு எப்படி அவனை நடராஜன் என்கிறீர்கள்? என்று எதிர்க் கேள்வி கேட்ட ராஜராஜன் தேவாரப் பாடல்கள் வைக்கப்பட்டிருக்கும் அறையை உடைத்து பாடல்களை வெளிக்கொணர்ந்தான்.

அன்று ராஜராஜ சோழன் கரையான் உண்டது போக எஞ்சிய தேவாரப் பாடல்களை மீட்கவில்லை என்றால் கோயில்களில் பாடுவதற்குக்கூட தமிழ் இல்லாமல் போயிருக்கும்.

இங்கே தமிழ்த் திருமுறைகள் தீட்டு மொழி!

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே உள்ள குமுடிமூலை என்ற சிற்றூரைச் சேர்ந்தவர் ஆறுமுகசாமி என்ற ஓதுவார். இவருக்கு வயது 73. தில்லை நடராசர் கோயிலில் சிற்றம்பல மேடையில் திருவாசகம் உள்ளிட்ட சிவபுராணப் பாடல்களை அவர் பாட விரும்பினார். ‘பாடக்கூடாது’ என்று தீட்சிதர்கள் தடுத்தனர். தடுத்தது மட்டுமல்ல கொடூரமாகத் தாக்கினார்கள். ‘அன்பே சிவம்’ பேசியவர்கள் அடியாட்களாக மாறினார்கள்.

ஆறுமுகசாமிக்கு ஆதரவாகப் போராட்டம் வெடித்தது! தீட்சிதர்கள் ரொம்ப சாமர்த்தியசாலிகள். அவர்கள் தேவாரம், திருவாசகம் பாடுவதை எதிர்க்கவில்லையாம். பாடுகின்ற இடம் சிற்றம்பல மேடையாக இருக்கக் கூடாதாம். அதாவது, சிற்றம்பல மேடை என்பது மூலவர் (நடராசர்) சந்நிதியாம். அங்கு வடமொழி வேதங்கள் ஒலிக்கலாமாம். பார்ப்பனர்கள் மட்டுமே அதைச் செய்வார்களாம். மூலவர் சந்நிதியில் திருவாசகம் ஒலித்தால் தீட்டுப்பட்டு விடுமாம்! சிற்றம்பல மேடையில் பாடுவதற்கு அறநிலையத்துறை ஆணையிட்டும் தீட்சிதர்கள் தடுத்து வந்தனர். இப்போது பார்ப்பனரல்லாதார் சிற்றம்பல மேடையில் ஏறும் உரிமை மீட்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

தில்லை தீட்சிதப் பார்ப்பனர்களின் பிடியிலிருந்து கோயில் மீட்பு!

தில்லை தீட்சிதப் பார்ப்பனர்கள் அடித்த கொள்ளை, மோசடிகள் அனைத்தையும் உயர்நீதிமன்றம் அம்பலப்படுத்தி அவர்களின் முகத்திரையைக் கிழித்தெறிந்திருக்கிறது. கோயில் நிர்வாகத்தைத் தீட்சிதர்களிடம் இருந்து பறித்து ஓய்வுபெற்ற நீதிபதிகள் வி.பாரதிதாசன், ஆர். சுரேஷ்குமார் தலைமையில் 5 பேர் அடங்கிய குழுவிடம் கோயில் நிர்வாகத்தை நீதிமன்றம் ஒப்படைத்துள்ளது.

சிவபெருமான் பூமிக்கு நேரடியாக சேவை செய்ய அனுப்பி வைக்கப்பட்ட பூதேவர் பரம்பரை என்று அவர்கள் மார்தட்டிக் கொண்டார்கள். எனவே தங்களை அரசு நிர்வாகத்தின் கீழ் கட்டுப்படுத்த முடியாது என்று கூறி உச்சநீதிமன்றத்தின் ஆணையைப் பெற்றார்கள்.

2014 ஆம் ஆண்டு முதல் மீண்டும் கோயில் உரிமையைக் கைப்பற்றி நிர்வாகம் செய்ய ஆரம்பித்த இந்தப் பார்ப்பனர்கள் அடித்த கொள்ளை அதிர்ச்சியடைய வைக்கிறது. உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன் மற்றும் இ.மனோகரன் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். தீர்ப்பில் கீழ்க்கண்ட மோசடிகளை நீதிமன்றம் சுட்டிக்காட்டி இருக்கிறது.

★ புராதனக் கட்டமைப்பைக் குலைக்கும் வகையில் கோயில் வளாகத்தில் தேவையில்லாத சட்டவிரோதமான கட்டுமானங்களைக் கட்டியுள்ளனர்.

★ கோயில் சொத்துகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

★ கடந்த 12 ஆண்டுகளாக கோயிலின் உண்மையான வருமானத்தைத் தீட்சிதர்கள் மூடிமறைத்துள்ளனர்.

★ அன்னதானம் வழங்குவதற்காக பெறப்பட்ட நன்கொடைகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன.

★ கோயில் வளாகம் உணவு விற்பனை வளாகமாக (Food court) மாற்றப்பட்டு மதம் சாராத நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

★ கோயில் புராதானக் கட்டமைப்புகள் சீர்குலைந்து கிடக்கின்றன.

இப்போது அமைக்கப்பட்டுள்ள நிர்வாக அமைப்பு இந்த மோசடிகளையும் குறைகளையும் கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் இந்து அறநிலையத் துறை இந்தக் குழுவுக்கான செலவுகளை ஏற்க வேண்டும் என்றும் நீதிபதிகள் தீர்ப்பில் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

நீதிபதிகள் தீர்ப்பில் பின்னிணைப்பாக இந்த மோசடிகள், ஊழல்களுக்கு ஆதாரங்களாகப் படங்களையும் கடிதங்களையும் வெளியிட்டிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. கோயில்களை அரசின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று கூப்பாடு போடுகிறார்கள். பொதுத் தீட்சிதர் கட்டுப்பாட்டில் இருந்த தில்லை நடராசன் கோயில் ஊழல் இப்படி மானங்கெட்டுச் சந்தி சிரிப்பதைக் கண் திறந்து பார்க்க வேண்டும்.

தில்லை திருச்சிற்றம்பல மேடையில் ஏறி தேவாரம், திருவாசகம் பாடுவதற்கு தீட்சிதப் பார்ப்பனர்கள் தடை போட்டிருந்தனர். இந்தத் தடையையும் உயர்நீதிமன்றம் இப்போது நீக்கியுள்ளது. திருச்சிற்றம்பல மேடையில் அனைத்து ஜாதியினரும் ஏறிப் பாடவும் தேவாரம் பாடவும் அனுமதி கோரி கடந்த 2022 ஆம் ஆண்டு, பிப்-28ஆம் தேதி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தில்லையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

குடியாத்தத்தில் கழகக் கருஞ்சட்டைகளின் குடும்ப விழா!

தந்தை பெரியாரின் 148- வது பிறந்தநாளை முன்னிட்டு வேலூர் மாவட்டக் கழக மகளிர் அணி சார்பாக அக்.31, சனிக்கிழமை அன்று மாலை 3.00 மணி அளவில் குடியாத்தம், கண்ணம்மாள் வரதராஜ திருமண மண்டபத்தில் கருஞ்சட்டைகளின் குடும்ப விழா தோழர் அமுதா திலீபன் தலைமையில் நடைபெற்றது. பிரவீனா, வைரமணி, ரம்யா, தீபலட்சுமி, நந்தாதேவி, தேன்மொழி, கல்பனா, ரோகினி, ஷாலினி, லாவண்யா, சங்கீதா, துர்காதேவி ஆகிய தோழர்கள் முன்னிலை வகித்தனர். சசிகலா வரவேற்புரையாற்றினார். மோகனப்பிரியா நிகழ்ச்சியின் நோக்கவுரையாற்றினார். வெங்கடேஸ்வரி தொடக்கவுரையாற்றினார்.

கழகக் குடும்பக் குழந்தைகளின் ஆடல், பாடல், பேச்சுத் திறமைகளை வெளிப்படுத்தி மகிழ்ச்சியில் மூழ்கினர். கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவை. ஈஸ்வரன், சமூகச் செயற்பாட்டாளர் லியாகத் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர்.



முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் திமுக மாநில மருத்துவர் அணிச் செயலாளருமான நா. எழிலன் பேசுகையில், பெரியாரால் நாம் அடைந்த பலன்களைப் பற்றியும், பெண்சுதந்திரத்தை நாம் கொள்கை அளவில் மட்டும் பேசாமல் நம்மைச் சுற்றியுள்ள பெண்களுக்குக் கருத்துரிமையும், சுயமாகச் சிந்தித்து நடைமுறைப்படுத்த நாம் இடமளிக்க வேண்டும் என்றும், கூறினார். தகவல் தொழில்நுட்பங்களை நம் குழந்தைகளுக்கு பொழுதுபோக்கிற்கு அல்லாமல் கல்விக்கு மட்டுமே பயன்படுத்தக் கற்றுத்தர வேண்டும் எனவும், நாம் பெரியார், அம்பேத்கர் வழிகாட்டிய சமூகநீதி, சமத்துவ வழியில் பயணிக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி பெரியார், அம்பேத்கர் குடும்ப வாழ்வும், அரசியல் வாழ்வும் என்ற தலைப்பில் பார்ப்பனச் சூழ்ச்சிகளில் இருந்து நம்மை சுயமரியாதை, அறிவியல், பகுத்தறிவு ஆகியவற்றில் தலைநிமிர வைத்த பெரியார், அம்பேத்கர் வழியில் நடந்து, அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், நம்வாழ்வில் சுயசிந்தனைகளை வளர்க்கும் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த வேலூர் மாவட்ட மகளிர் அணித் தோழர்களுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக இருந்த தோழர்களுக்கும், கலந்து கொண்டவர்களுக்கும் நன்றியையும் வாழ்த்துகளைக் கூறி நிறைவுரையாற்றினார்.

கோவாவில் நடைபெற்ற சர்வதேச அளவிலான சிலம்பம் போட்டியில் பங்கேற்று முதல் பரிசை வென்று நம் கழகத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்த கழகத் தோழர்கள் மோ.வை.யாழினி, செ.சு. ஹர்சினி (எ) கனல்விழி மற்றும் அவர்களுக்குப் பயிற்சி அளித்த பயிற்சியாளர் மாஸ்டர் சிவகுமார் அவர்களுக்கும், பஞ்சாப் மாநிலத்தில் 2024-ம் ஆண்டு தேசிய அளவில் நடைபெற்ற விஞ்ஞான மேளா அறிவியல் கண்காட்சியில் பங்கேற்று தனது அறிவியல் கண்டுபிடிப்புக்கு பாராட்டுச் சான்று பெற்ற கோ.வெ.தமிழ்யாழினி ஆகியோருக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மருத்துவர் எழிலன் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். அறிவியல் மன்றத் தலைவர் தெருவிளக்கு கோபிநாத் தந்தையான மறைந்த ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் ராசேந்திரன் மற்றும் சந்திரன் ஆகியோரின் படங்களை கழகத் தலைவர், மருத்துவர் எழிலன் ஆகியோர் முறையே திறந்து வைத்தனர். திரைப்படக் கலைஞர் சித்திரசேனன், மேடைப் பாடகர் ஜெய்கர் ஆகியோரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

விழா அரங்கின் முகப்பில் வேலூர் மாவட்டக் கழகத் தோழர்களின் ஜாதி மறுப்பு சுயமரியாதை திருமணப் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மாவட்டத்தில் கழகத் தோழர்கள் பத்துக்கும் மேற்பட்டோர் ஜாதி மறுப்பு திருமணம் புரிந்துள்ளனர். வேலூர் மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற போராட்டங்கள் மற்றும் வேலூரில் கழகத் தலைவர் பங்கேற்ற நிகழ்ச்சிகள் உள்ளிட்ட நிகழ்வுகள் குறித்த படங்களுடன் கூடிய பதாகை பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

சென்னை மாவட்டக் கழகம் நடத்திய குடும்ப விழாவில் முன்வைக்கப்பட்ட வாழ்வியல் நெறிகள் விழாவில் முன்வைக்கப்பட்டன. கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழகத் தலைமைக்குழு உறுப்பினர் ந. அய்யனார், சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி, இளைஞரணி அமைப்பாளர் அருண், வேலூர், சேலம் மாவட்டங்களைச் சார்ந்த கழக மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைப் பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் மற்றும் தோழமை இயக்கத் தோழர்கள் என 200- க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இறுதியாக தோழர் சுகந்தி நன்றி கூறினார்.

முறத்தால் மொத்துங்கள் - பெரியார்


தீபாவளி கதையைப் பற்றி சுமார் 10 வருடங்களுக்கு மேலாக எழுதியும் பேசியும் வருகிறோம். ஆதலால் விரித்து எழுத வேண்டியதில்லை. என்றாலும் குறிப்பு கொடுக்கின்றோம். இது தீபாவளிக் கதை மிகவும் அதிசயமானதும் ஆபாசமானதும் இழிவும் ஈனத்தன்மையும் பொருந்தியதுமாகும்.

மகாவிஷ்ணுவுக்கு வாயில் காப்பாளராக இருந்த இரு காவலர்கள் உத்தரவின்றி உள்ளேவிட மறுக்கப்பட்ட இரண்டு பிராமணர்கள் சாபத்தால் இரணியன் இரண்யாட்சன் என்று இரண்டு ராட்சதர்களாகப் பிறந்து விஷ்ணுவால் கொல்லப்பட்டு சீக்கிரம் மோட்சமடைய வேண்டுமென்று ஏற்பட்டு விட்டதற்கிணங்க மூத்தவன் தேவர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்தான். இளையவன் பூமியை பாயாக சுருட்டி எடுத்துக்கொண்டு ஓடி சமுத்திரத்திற்குள் நுழைந்து கொண்டான். தேவர்கள் வேண்டுகோளால் மூத்தவனைக் கொல்ல மகாவிஷ்ணு நரசிம்ம (சிங்க) அவதாரமெடுத்து வந்து கொன்று விட்டார். இளையவனான இரண்யாட்சனைக் கொல்ல மகாவிஷ்ணு வராக (பன்றி) அவதாரமெடுத்து வந்து சமுத்திரத்திற்குள் பாய்ந்து இரண்யாட்சனைக் கொன்று பூமியைக் கொண்டுவந்து பழையபடி விரித்துவிட்டு போய்விட்டார்.

இரண்யாட்சன் பூமியைச் சுருட்டித் திருடிக் கொண்டு போகக் காரணம் என்ன?

பூமி தட்டையாய் இருந்தால்லல்லவா சுருட்ட முடியும்? அதுதான் உருண்டை ஆயிற்றே? பூமியை உருட்டிக் கொண்டல்லவா போயிருக்க வேண்டும்?

அப்படியே சுருட்டினதாக வைத்துக் கொள்வதானாலும் சுருட்டினவன் எங்கே இருந்துகொண்டு சுருட்டி இருப்பான்? ஒரு சமயம் ஆகாயத்தில் தொங்கிக் கொண்டு சுருட்டி இருந்தாலும் பூமியில் இருந்த மலை, சமுத்திரம், ஆறு, ஜீவப்பிராணி முதலிய சகலமும்தானே பாயாகச் சுருட்டப்பட்டு பாய்க்குள் சிக்கி இருக்க வேண்டும். அப்படி இருக்க அவன் பூமியை தூக்கிக் கொண்டு ஒளிய வேறு சமுத்திரம் ஏது? வேறு சமுத்திரமாயிருந்தால் அது எதன்மீது இருந்திருக்கும்? அப்படியே வைத்துக் கொண்டாலும் இந்தப் பூமியை திருப்பிக் கொண்டு வர விஷ்ணு அவதாரமெடுப்பானேன்? அதுவும் பன்றி அவதாரமெடுத்ததெதற்கு? அப்போது அது ஆகாரமான எதைத் தின்று இருக்கும்? எதையோ தின்று தொலைந்து போகட்டும்.



இந்தப் பன்றி பூமியைப் புணர ஆசைப்படுவானேன்! கொண்டு வந்ததற்குக் கூலியா? அப்படியேதான் இருக்கட்டும். இதற்கு இந்தப் பன்றியுடன் போகம் செய்ய பூமிதேவி இணங்கலாமா? இது என்ன கதை? திராவிட மக்களை அசுரன், இராட்சதன், அரக்கன் என்று கூறி அவர்களை இழிவு செய்ய எழுதினதல்லாமல் வேறு என்ன இது? வங்காளத்தில் ஆரியர் வருமுன்பு திராவிடர்களேதானே ஆண்டு கொண்டிருந்திருக்க வேண்டும்? ஆரியர்கள், திராவிடர்களைக் கொல்வதானால் மானம், வெட்கம், பார்க்காமல் மிருகங்களுடன் புணர்ந்தானாலும் சரி, மலத்தைத் தின்னாலும் சரி ''எப்படியான இழிவான அசிங்கமான காரியத்தைச் செய்தாவது கொல்லலாம்'' என்கின்ற தர்மத்தை ஆரியர்களுக்குப் போதிக்க வந்த மனுநூல் போன்ற ஒரு ''கோட்'' தானே ஒழிய இப்புராணங்களுக்கு வேறு என்ன கருத்து சொல்ல முடியும்? ஆகவே அப்பேர்ப்பட்ட கதையில் ஒன்றான நரகாசுரன் கதையை நம்பி நாம் பண்டிகை கொண்டாடலாமா? நாம் திராவிடரல்லவா? நம் கடவுள் மலம் தின்பதையும், பெண் கடவுள்கள் பன்றியுடன் புணர்ச்சி செய்வதையும் ஒப்புக் கொள்ள நம்மால் முடியுமா? ஒப்புக் கொள்ளலாமா? நமக்கு மானம், வெட்கம், புத்தி ஒன்றுமே கிடையாதா?

நம் தலைவனைக் கொன்றதை நாம் கொண்டாடும் அவ்வளவு மானம் ஈனம் அற்றவர்களா நாம்? நாம் வீரத் திராவிடரல்லவா? நம் இன மக்கள் தீபாவளி கொண்டாடலாமா? கண்டிப்பாய் கொண்டாடாதீர்கள்? கொண்டாடுவதனால் இந்தக் கதையைக் கொண்ட புத்தகங்கள் வாங்கி நடு வீதியில் வைத்து ஆண்கள் மிதியடியால் மிதிமிதியென்று மிதியுங்கள். பெண்கள் முறத்தால் மொத்து மொத்து என்று மொத்துங்கள்.

- குடி அரசு 07.10.1944

தேர்தல் ஆணையர் நிர்வகித்த இணையத்தின் மோசடி அம்பலம்!

ECINET தளத்தையும் வாக்காளர் பட்டியல் தரவுத்தளத்தையும் மத்தியமயமாக்குவது தொடர்பாகத் தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். டெல்லி அய். அய்.டி மற்றும் கொல்கத்தா அய்.அய்.எம் ஆகிய கல்வி நிறுவனங்களின் முன்னாள் மாணவரும், தரவு அறிவியலாளருமான சௌரவ் ராஜ்புத் தயாரித்துள்ள அறிக்கையின்படி, 'ECINET' தளத்தில் மாநில ஒருங்கிணைப்பு அலுவலர்களை உருவாக்குதல், நிர்வகித்தல், புதுப்பித்தல் ஆகியவற்றுக்கெனத் தனிப்பகுதி உள்ளது. அதில், அந்தந்த மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் அனுப்பும் தகவல்கள் பதிவாகாமல் தடுக்கும் தில்லுமுல்லுகள் நடந்துள்ளன.

மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் மட்டுமே இயக்கும் உரிமை கொண்ட ஈ.சி.அய்.நெட் இணையத்தை தலைமைத் தேர்தல் அதிகாரி தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த முறைகேடு அம்பலமானது. அதைத் தொடர்ந்து அதன் இணையத்திலேயே நடந்த தில்லுமுல்லுகளும் அம்பலமாகியுள்ளன. ஒவ்வொரு மாநில ஒருங்கிணைப்பு அலுவலரின் பதிவிலும், அவரைச் செயலிழக்கச் செய்வதற்கான பொத்தான் உள்ளது. அந்தப் பொத்தானை அழுத்தும்போது தோன்றும் அறிவிப்பில், "இந்த மாநில ஒருங்கிணைப்பு அலுவலரைச் செயலிழக்கச் செய்தால், அங்கிருந்து அனுப்பும் வாக்காளர் பெயர் பதிவாகாது. செப்.28 முதல் இந்த மோசடியைக் கண்டறிய முடிந்ததாக சவுரவ் ராஜ்புத் தெரிவித்துள்ளார். மேலும், மேற்கு வங்கத்தில் மட்டும் தேர்தல் பதிவுப் பொறுப்பு அலுவலர்கள் (Electoral Registration Officers — EROs) மற்றும் உதவித் தேர்தல் பதிவுப் பொறுப்பு அலுவலர்கள் (Assistant EROs — AEROs), வாக்காளர்களின் கணக்கெடுப்புப் படிவங்களை மறுபரிசீலனை செய்வதையும், அறிவிப்பு மற்றும் விசாரணை தொடர்பான தகவல் பலகையைப் பார்ப்பதையும் தடுக்கும் வசதியும் ECINET தளத்தில் இருப்பதாகத் தணிக்கை அறிக்கை கூறுகிறது.

இது தொடர்பாகக் காங்கிரஸ் கட்சி கூறியதாவது: "பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரின் அறிவுறுத்தலின்படி, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல் நடைமுறைகளில் நடைபெறும் அனைத்து முறைகேடுகளையும் மத்தியமயமாக்குவதற்காக ECINET தளத்தை உருவாக்கியுள்ளார் என்பது இப்போது நன்கு நிறுவப்பட்ட உண்மையாகிவிட்டது." காங்கிரஸ் தலைவர் ஜெய்ராம் ரமேஷ், சமூக ஊடகத் தளமான எக்ஸ் (X) இல் வெளியிட்ட பதிவில் மேலும் கூறியதாவது: "தேர்தல் வாக்காளர் பட்டியல் தொடர்பாகச் சட்டப்பூர்வ அதிகாரம் தேர்தல் பதிவுப் பொறுப்பு அலுவலர்களுக்கே (ERO) உள்ளது என்பதைச் சட்டம் உறுதிப்படுத்துகிறது. ஆனால், நாடு முழுவதும் ECINET அமைப்பும் தேர்தல் ஆணையத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவும் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மீறி, அவற்றுக்கு எதிராகச் செயல்பட்டுள்ளன." என்று பதிவு செய்துள்ளார்.

திமுக பொதுச் செயலாளர் துரை முருகன் இல்லத்தின் 'வைதீக திருமணம்'

புரோகித பார்ப்பனர்களின் வேத மந்திரம் முழங்க அஷ்டலட்சுமிகள் வரவேற்க திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்களின் பேத்திக்கு 'விவாஹ சுபமுஹூர்த்தம்' ஷேமஹரமாய் மங்களத்துடன் தேவாதி தேவர்களின் அருள் ஆசியுடன் நடந்து முடிந்து இருக்கிறது.இந்த 'கன்னிகா தானத்'தை நேரில் ஆசீர்வதிக்க அண்ணாவும் கலைஞரும் இல்லையே என்று துரைமுருகன் அவர்களின் இதயம் கண்ணீர் வடித்திருக்கும்.

அண்ணா இருந்திருந்தால் "நான் கொண்டு வந்த சுயமரியாதைத் திருமணச் சட்டத்தையே இப்படி அவமதிக்கிறாயே! நீ தான் எனக்குத் தம்பியா?" என்று நிச்சயம் கேட்டிருப்பார். கலைஞர் இருந்திருந்தால் "வடமொழியான சமஸ்கிருதத்தை எதிர்த்து நான் எவ்வளவு எழுதி இருப்பேன்; பேசி இருப்பேன் ; அதை நீ தேவ பாஷை என்று ஏற்றுக்கொண்டு உன் வீட்டுத் திருமணத்தில் ஓத வைத்திருக்கிறாயே; இதுதான் நீ எனக்குக் காட்டும் மரியாதையா?" என்று உரத்த குரலில் கேட்டிருப்பார்.

அண்ணாவும் கலைஞரும் "உனக்கு அதிகாரத்திற்கு வருவதற்கு மட்டும்தான் நாங்கள் தேவை; கொள்கைக்கு வேண்டாமா?" என்று நிச்சயமாகக் கேட்டிருப்பார்கள். ஒரு கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்து கொண்டு கழகத்திற்கு ஊறு விளைவிக்கும் என்று தெரிந்திருந்தும், கொள்கை உணர்வுள்ள கழகத் தோழர்கள் இதை ஏற்க மாட்டார்கள் என்பதை உணர்ந்திருந்தும், இப்படி ஒரு வைதீகக் கூத்தை அரங்கேற்றியே தீருவேன் என்று பிடிவாதம் பிடித்து நிகழ்த்திக் காட்டிவிட்டார் தமிழை 'உயிர்மூச்சாக'க் கொண்டு வாழும் மதிப்புக்குரிய துரைமுருகன்.

அவரிடம் பெரியார் கொள்கையை நாம் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை. அண்ணா, கலைஞர் கொள்கைகளுக்காவது துரோகம் செய்யாமல் இருந்திருக்கக் கூடாதா? அவர்களின் வழியாக கிடைத்த அதிகாரத்தை ஆரியத்திடம் அடமானம் வைப்பது வரலாற்றுத் துரோகம் அல்லவா? என்ற கேள்வியை திராவிட இயக்க கொள்கைப் பற்றாளர்கள் ஒவ்வொருவரும் கேட்கத்தான் செய்வார்கள். கட்சிக் கட்டுப்பாட்டை மீறியவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அறிவிப்பை ஒவ்வொரு நாளும் 'முரசொலி'யில் துரைமுருகன் தான் அறிவித்து வருகிறார். இப்போது துரைமுருகன் அவர்கள் செய்திருப்பது கழகக் கட்டுப்பாட்டைக் காப்பாற்றும் செயல் தானா?

- விடுதலை இராசேந்திரன்

தீபாவளியின் கற்பிதக் கதைகள்

தீபாவளி திருவிழா இந்தியா முழுதும் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு பகுதியிலும் தீபாவளி கொண்டாடக் கூறப்படும் காரணங்கள் வேறுபடுகின்றன. தென் மாநிலங்களில் நரகாசூரனை வதம் செய்த காரணத்தால் தான் தீபாவளி பண்டிகைக் கொண்டாடப்படுகிறது என கூறுகின்றனர். இந்தியா முழுதும் கூறப்படும் வேறு பல காரணங்கள்.

திருப்பாற்கடலை அமிர்தம் பெறுவதற்கு கடைந்தபொழுது தோன்றியவர் லட்சுமி. இவர் செல்வத்தைத் தரும் தேவி. விஷ்ணுவின் சக்தியாக அமைந்தவர். திருப்பாற்கடலில் இருந்து லட்சுமி தோன்றிய நாள் தீபாவளி என்று கூறுவர்.

பாண்டவர்கள் பாரத யுத்தத்தில் வெற்றி பெற்று மீண்டும் அஸ்தினாபுரம் சென்ற நாள் தீபாவளி என்று கூறுவர்.

அரசர் விக்கிரமாதித்தன் முடி சூடிய நாள் தீபாவளி என்பர். சமண சமயத்தின் கடைசி தீர்த்தங்கரர் முக்தி அடைந்த நாள், தீபாவளி என்று சமணர்கள் கொண்டாடுகின்றார்கள்.

சீக்கியர்களின் கடைசி குருவான, குரு கோவிந்த சிங், அவுரங்கசீப் மன்னனுடைய சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட நாள் தீபாவளி என்பர்.

இதற்கு முந்திய சீக்கிய குருவான ஹர்கோபிந்த் சிங் அவர்கள் ஜஹாங்கீர் மன்னனுடைய சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட நாள் தீபாவளியாக கொண்டாடப்படுகிறது என்றும் கூறுவர்.

கி.பி. 1577ல் அமிர்தசரஸில் உள்ள சீக்கியர்களின் பொற்கோவிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்ட தினம் தீபாவளி என சீக்கியர்கள் கருதுகின்றனர். இவ்வாறு பல காரணங்களுக்காக சீக்கிய மதத்தவர்களும் தீபாவளியைச் சிறப்பாக கொண்டாடுகிறார்கள்.

தீபாவளிக்காக சீக்கியர்களின் பொற்கோவில் ஒவ்வொரு ஆண்டும் விளக்குகளால் வெகு சிறப்பாக அலங்கரிக்கப்படுகிறது.

வட இந்தியாவில் இந்துக்கள் கொண்டாடும் தீபாவளியை ராமர் வனவாசத்தில் இருந்து மீண்டும் அயோத்திக்கு திரும்பிய நாளாகக் கொண்டாடி அதையே புது வருடப்பிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

எனவே தீபாவளி என்பது பார்ப்பனர்களின் கற்பிதம். வரலாறு அல்ல! பார்ப்பனியத்தை எதிர்த்தவர்கள் என்கவுண்டர் செய்யப்படுவார்கள் என்ற அச்சுறுத்தல்.

குன்றக்குடி அடிகளார் - மறைமலையடிகளிடம் பெரியார் காட்டிய மனிதநேயம்

குமாரபாளையம் கூட்டத்தில் கொளத்தூர் மணி பேச்சு (2)

செப்-29 அன்று குமாரபாளையத்தில் கழகம் நடத்திய பெரியார் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தில் 'பெரியாரின் போராட்டங்களும், மனித நேயமும்' என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை கடந்த இதழின் தொடர்ச்சி....

பெரியாரைப் பற்றிய ஒரு நிகழ்ச்சியை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். பெரியார் ஒருமுறை குன்றக்குடி ஆதீனத்திற்குச் செல்கிறார். அப்போது இளைய தம்பிரானாக இருந்த நடராஜ தேசிகர் வருகிறார். அவர் பெரியாருடைய நெற்றியில் திருநீறு பூசுகிறார். பெரியார் எதுவும் பேசாமல் இருந்துவிடுகிறார். பின்னர் உள்ளே சென்ற பிறகு முகத்தைக் கழுவிக்கொள்கிறார். அது வேறு செய்தி.

ஆனால், நீங்கள் ஏன் என்னுடைய நெற்றியில் திருநீறு பூசினீர்கள்?" என்று அவர் கோபப்படவில்லை. விடுங்கள். அது அவர்களுடைய சம்பிரதாயம். அவர்களுடைய வழக்கப்படி செய்திருக்கிறார்கள். அதனால் என்ன வந்துவிட்டது?' என்று கூறிவிட்டுச் செல்கிறார். இப்படிப்பட்ட அணுகுமுறையைக் கொண்டவர்தான் பெரியார், பக்தர்களிடமும் அப்படித்தான் நடந்துகொண்டார். பார்ப்பனர்களிடமும் அப்படித்தான் நடந்துகொண்டார். அதுதான் மனிதாபிமானம். மனிதர்களிடம் நேயத்தைக் காட்டுவது வேறு; கொள்கையில் உறுதியாக இருப்பது வேறு.

மறைமலையடிகள் தொடர்பான ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட வேண்டும். இது வரலாற்றில் நடைபெற்ற ஒரு சிக்கலான நிகழ்ச்சி. வேறு செய்திக்குச் செல்வதற்கு முன்னால் இதைப் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. மறைமலையடிகள் ஒருமுறை சைவர்களுடைய விழா ஒன்றில் பேசுகிறார். அப்போது, கடவுளைப் பற்றிப் பேசும்போது மிகவும் கடுமையான சில கருத்துகளை அவர் தெரிவித்ததாக ஒரு தகவல் வெளியாகிறது. அந்த நிகழ்ச்சிக்குச் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவரும் 'திராவிடன்' பத்திரிகையின் ஆசிரியருமான கண்ணப்பர் சென்றிருக்கிறார். அவருடன் அவருடைய நண்பர்களும் சென்றிருக்கிறார்கள்.

அவர்கள் அந்தச் செய்தியைப் பெரியாரிடம் தெரிவிக்கிறார்கள். ஆனால், பெரியார் உடனடியாக அதற்கு எதிர்வினையாற்றவில்லை. 'இப்படி செய்தியைக் கேள்விப்படுகிறோம். அது உண்மையா என்பதை விசாரித்துத் தெரிந்துகொண்டு, அதற்கான மறுமொழியை எழுதுவோம்' என்று கூறுகிறார். அடுத்த வாரமும் அதைப் பற்றி எழுதவில்லை. 'இன்னும் முழுமையான தகவல்கள் கிடைக்கவில்லை. அடுத்த வாரம் எழுதுவோம்' என்று கூறுகிறார். இதற்கிடையில் மறைமலையடிகள் தன்னுடைய பேச்சு தொடர்பாக வருத்தம் தெரிவித்து ஒரு கடிதத்தை அனுப்புகிறார். அந்தக் கடிதத்தைக் கி.ஆ.பெ. விசுவநாதத்திடம் கொடுத்து அனுப்புகிறார்.

அப்போது கி.ஆ.பெ. விசுவநாதம் சுயமரியாதை இயக்கத்தில் செயல்பட்டுக்கொண்டிருந்தார். அவர் அந்தக் கடிதத்தைக் கொண்டுவந்து கொடுக்கிறார். 'குடிஅரசு' வாரத்திற்கு ஒருமுறைதான் வெளிவரும். ஆனால், 'திராவிடன்' நாளேடு தினமும் வெளிவந்துகொண்டிருந்தது. எனவே, உடனடியாக வெளியிட வேண்டும் என்பதற்காக அந்தக் கடிதத்தைத் 'திராவிடன்' நாளேட்டில் கொடுக்கிறார்கள். அந்த நாளேட்டில், 'மறைமலையடிகள் மன்னிப்புக் கடிதம் என்ற தலைப்பில் செய்தியை வெளியிட்டுவிடுகிறார்கள். இதைக் கண்ட பெரியாருக்குக் கடுமையான கோபம் ஏற்படுகிறது. உடனடியாகக் 'குடிஅரசு' இதழில் அதைப் பற்றி எழுதுகிறார். மறைமலையடிகள் எவ்வளவு பெரிய அறிஞர் என்பதைப் பெரியார் விளக்குகிறார். மறைமலையடிகளைத் தன்னிகரற்ற அறிஞர்களில் ஒருவராக நான் கருதுகிறேன். தமிழ் இனத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய அறிஞர்களில் அவரும் ஒருவர்' என்று கூறுகிறார்.

அத்துடன், ஒரு முக்கியமான செய்தியையும் வெளிப்படுத்துகிறார். மறைமலையடிகள் என்ன பேசினார் என்பது தொடர்பான முழுமையான தகவல்கள் தனக்கு முதல் நாளிலேயே கிடைத்துவிட்டதாகப் பெரியார் தெரிவிக்கிறார். ஆனால், அந்தச் செய்தியை உடனடியாக வெளியிடாமல், முழுமையான தகவல்கள் கிடைக்கவில்லை என்று கூறிக்கொண்டிருந்ததாக விளக்குகிறார். ஏன் அப்படிச் செய்தார்? மறைமலையடிகள் ஏதாவது விளக்கம் அளித்தால், அந்தப் பிரச்சினையை அத்துடன் விட்டுவிடலாம் என்பதற்காகத்தான். அவ்வளவு பெரிய அறிஞருடைய பெருமைக்குக் களங்கம் ஏற்படக்கூடாது என்பதற்காகப் பெரியார் அப்படிச் செயல்பட்டார். ஆனால், மறைமலையடிகள் தாமாகவே வருத்தம் தெரிவித்து எழுதிய கடிதத்தை, மன்னிப்புக் கடிதம்' என்ற தலைப்பில் வெளியிட்டுவிட்டார்கள். இதற்காகப் பெரியார் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவிக்கிறார்.

தன்னுடன் பணியாற்றுபவர்களைப் பெரியார் 'தொண்டர்கள்' என்று அழைப்பதில்லை. 'என்னுடன் பணியாற்றும் நண்பர்கள்', 'கூட்டுப் பணியாளர்கள்' என்றுதான் குறிப்பிடுவார். அப்படிப்பட்ட தன்னுடைய கூட்டுப் பணியாளர்கள் மறைமலையடிகளின் கடிதத்தை மன்னிப்புக் கடிதம்' என்ற தலைப்பில் வெளியிட்டதற்காக, மறைமலையடிகளிடம் நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டுக்கொள்வதாகப் பெரியார் எழுதுகிறார். எவ்வளவு பெரிய பெருந்தன்மை! மறைமலையடிகள் தன்னுடைய கருத்துக்கு மாறாகப் பேசியிருக்கிறார் என்பதற்காக அவரை இழிவுபடுத்த வேண்டும் என்று பெரியார் நினைக்கவில்லை. அதே நேரத்தில், அந்த அறிக்கையின் இறுதியில் மற்றொரு முக்கியமான கருத்தையும் எழுதுகிறார்.

தாட்சண்யம் கருதியோ, மரியாதை கருதியோ என்னுடைய கொள்கையில் ஓர் அங்குலம்கூட விட்டுவிலக மாட்டேன்' என்று தெரிவிக்கிறார். அதாவது, உங்களிடம் மரியாதை காட்டுகிறேன். உங்களுடைய பெருமையை மதிக்கிறேன். நடந்த தவறுக்காக வருத்தமும் தெரிவிக்கிறேன். ஆனால், அதற்காக என்னுடைய கொள்கையை மாற்றிக்கொள்ள மாட்டேன் என்பதுதான் பெரியாருடைய நிலைப்பாடு. இப்படிப்பட்ட

சங்ககாலத்தில் கல்வி அறிவு பெற்ற நம் சமூகம் அதன் தொடர்ச்சியை இழந்து ஏன் தாழ்ந்தது?



சிந்தனையைக் கொண்ட தலைவர்தான் பெரியார். மறைமலையடிகள் கடுமையாகப் பேசியிருக்கிறார் என்பதற்காக, நீங்கள் சைவர்கள்; நீங்கள் இப்படித்தான் பேசுவீர்கள்' என்று பெரியாரும் பதிலுக்குக் கடுமையாகப் பேசியிருக்க முடியும். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை.

பெரியார் மனிதர்களைப் பிரித்துப் பார்த்த விதமே வேறுபட்டது. அவர் மனிதர்களை இரண்டு பிரிவுகளாகத்தான் பார்த்தார். ஒன்று, உரிமைகள் பறிக்கப்பட்டவர்கள். மற்றொன்று, உரிமைகளைப் பறித்துக்கொண்டவர்கள். இந்த இரண்டு பிரிவினரையும்தான் அவர் எதிரெதிராக நிறுத்தினார். மனிதர்களைப் பல அடிப்படையிலும் பிரிக்கலாம். ஆனால், நம்முடைய நாட்டில் வர்ண அடிப்படையிலான பிரிவினை முக்கியமானதாக இருந்தது. வர்க்க வர்ணம் என்பது தென்னிந்தியாவுக்குப் பொருந்தாது; விந்திய மலைக்குத் தெற்கே வர்ணங்கள் கிடையாது என்று பல உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இங்கே பார்ப்பனர், சூத்திரர் என்ற இரண்டு பிரிவுகள்தான் இருக்கின்றன. மற்ற வர்ணப் பிரிவுகள் இங்கே இல்லை என்பதுதான் அந்த வாதம்.

சிலர் தங்களைச் சத்திரியர்கள் என்று அழைத்துக்கொள்கிறார்கள். வேறு சிலர் வைசியர்கள் என்று கூறிக்கொள்கிறார்கள். ஆனால், சத்திரியர், வைசியர் என்ற வர்ணப் பிரிவுகள் விந்திய மலைக்குத் தெற்கே இல்லை என்பதுதான் அந்தக் கருத்து. அவை வடஇந்தியாவில் இருந்த பிரிவுகள். இருப்பினும், நம்முடைய மக்களில் சிலர் தங்களைச் சத்திரியர்கள் என்றும் வைசியர்கள் என்றும் கூறிக்கொள்கிறார்கள். வைத்துக்கொள்கிறார்கள்.

ஆனால், பெரியார் இந்தச் சமூக அமைப்பை எப்படிப் பார்த்தார்? இந்த மக்களுக்குரிய உரிமைகளைப் பறித்துக்கொண்டு, இடையில் நுழைந்து ஆதிக்கம் செலுத்துகின்ற ஒரு பிரிவினர் இருக்கிறார்கள் என்று பார்த்தார். அந்த ஆதிக்கம் ஆட்சி அதிகாரத்தில் மட்டுமல்லாமல், மக்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் தலையிடுகின்ற அளவுக்கு இருந்தது. நம்முடைய கடவுள் நம்பிக்கைகள் ஒரு காலத்தில் எப்படி இருந்தன என்பதைப் பற்றியும் பெரியார் சிந்தித்தார்.

மறைக்கப்பட்ட கீழடி

இப்போது கீழடி அகழாய்வு தொடர்பாகப் பல செய்திகள் வெளிவருகின்றன. கீழடி அகழாய்வில் மதம் தொடர்பான அடையாளங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால், அதை ஒப்புக்கொள்வதற்குக்கூடச் சிலர் தயாராக இல்லை, கீழடி ஆய்வுகள் தொடர்பான செய்திகள் வெளிவந்து சில ஆண்டுகள்தான் ஆகின்றன. ஆனால், ஆதிச்சநல்லூர் அகழாய்வு தொடர்பான அறிக்கைகள் பல ஆண்டுகளாக வெளியிடப்படாமல் வைக்கப்பட்டிருக்கின்றன. இருபத்தேழு ஆண்டுகளாக வெளியிடப்படாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஏன் அப்படி வைக்கப்பட்டிருக்கின்றன? தமிழர்களுக்கென்று தனித்துவமான நாகரிகம் இருந்தது என்பது தெரிந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் என்று கருத வேண்டியிருக்கிறது. வடநாட்டிலிருந்து வந்தவர்கள்தான் எல்லாவற்றையும் உருவாக்கினார்கள் என்ற எண்ணம் நிலைநிறுத்தப்படுகிறது.

இந்த நாட்டில் எல்லாமே எங்களுடையதுதான். எங்களுடைய சட்டங்கள்தான் உங்களுக்கும் பொருந்தும். எங்களுடைய பண்பாடுதான் உங்களுக்கும் பொருந்தும்' என்ற ஆதிக்க மனப்பான்மை இன்றைக்கும் தொடர்கிறது. இந்த நிலையில்தான் பெரியார் தன்னுடைய போராட்டங்களை நடத்தினார். பெரியாருடைய போராட்டங்கள் எப்படி இருந்தன என்பதை இப்போது பார்க்கலாம். போராட்டங்களின்போது அவர் நடந்துகொண்ட விதத்தில்கூடப் பல்வேறு பார்வைகள் இருந்திருக்கின்றன. அவர் எந்தப் போராட்டத்தையும் ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்கான போராட்டமாக மட்டும் பார்க்கவில்லை. அதற்குப் பின்னால் இருக்கின்ற சமூக, பொருளாதார, அரசியல் காரணங்களையும் சேர்த்துப் பார்த்தார்.

இப்போது நாம் மாநில உரிமைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். பெரியார் காலப்போக்கில் தனித் தமிழ்நாடு என்ற கோரிக்கையை முன்வைத்தார். 1938ஆம் ஆண்டிலிருந்து தன்னுடைய இறுதிக்காலம் வரையிலும் தனித் தமிழ்நாடு கோரிக்கையை வலியுறுத்திக்கொண்டிருந்தார். அதே நேரத்தில், மாநில உரிமைகள் பறிக்கப்படும்போது அதை எதிர்க்க வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தார். மாநில உரிமைகள் என்பது ஒரு சில பிரச்சினைகளோடு மட்டும் தொடர்புடையதல்ல. அது பொருளாதாரக் கரண்டலோடும் தொடர்புடையது.

ஆங்கிலேயர்கள் இந்தியாவைச் சுரண்டுகிறார்கள் என்று தேசியவாதிகள் கூறினார்கள். இந்திய நாட்டின் செல்வங்களை ஆங்கிலேயர்கள் தங்களுடைய நாட்டிற்கு எடுத்துச் செல்கிறார்கள். இந்தியாவைச் சுரண்டுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டினார்கள். ஆங்கிலேயர்களுடைய கரண்டலை எதிர்த்துப் போராடினார்கள்.

ஆனால், பெரியார் மற்றொரு கேள்வியை எழுப்பினார். 'வடநாட்டுச் சுரண்டலைப் பற்றி உங்களுக்கு அக்கறை இருக்கிறதா? அதைப் பற்றி நீங்கள் எப்போதாவது சிந்தித்திருக்கிறீர்களா?' என்று கேட்டார். ஆங்கிலேயர்கள் இந்தியாவைச் சுரண்டுவதைப் பற்றிப் பேசுகிறீர்கள். ஆனால், வடநாட்டினர் தென்னாட்டைச் சுரண்டுவதைப் பற்றி ஏன் பேசுவதில்லை என்பதுதான் பெரியாருடைய கேள்வி. இந்தக் கேள்வியை முன்வைத்துத்தான் அவர் பல போராட்டங்களை நடத்தினார். ஆனால், பெரியாருடைய இந்தப் போராட்டங்களை நாம் போதுமான அளவுக்குக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.

ஓர் எடுத்துக்காட்டைப் பார்க்கலாம். 1950ஆம் ஆண்டில் நமக்கு இடஒதுக்கீடு இருந்தது. அது ஒரு பெரிய வரலாறு, அதைப் பற்றி மக்களுக்கு முழுமையாகச் சொல்லியாக வேண்டும். இடஒதுக்கீடு என்பது என்ன? சமூகத்தில் இருக்கின்ற செல்வங்களையும் வாய்ப்புகளையும் அனைத்துச் சமூகத்தினரும் சமமாகப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதன் வெளிப்பாடுதான் இடஒதுக்கீடு.

உழைப்பின் மூலமாக உற்பத்தியாகின்ற செல்வமாக இருந்தாலும் சரி, நாம் பெற வேண்டிய பிற வாய்ப்புகளாக இருந்தாலும் சரி, அவை அனைவருக்கும் சமமாகக் கிடைக்க வேண்டும். கல்வி வாய்ப்பாக இருக்கலாம். வேலைவாய்ப்பாக இருக்கலாம். வணிக வாய்ப்பாக இருக்கலாம். எல்லாவற்றிலும் அனைவருக்கும் சம உரிமை வேண்டும். அதுதான் சமத்துவம். ஆனால், நம்முடைய மக்களுக்குக் கல்வி வாய்ப்பு ஏன் கிடைக்கவில்லை? அதற்கு என்ன காரணம் கூறினார்கள்?

'உங்களுடைய நாக்கில் சரஸ்வதி எழுதவில்லை. அதனால்தான் உங்களுக்குக் கல்வி கிடைக்கவில்லை' என்று கூறினார்கள், சரஸ்வதி நாக்கில் எழுதுவதற்குள் நாக்கை நீட்டாமல் உள்ளே இழுத்துக்கொண்டுவிட்டீர்கள் என்று வேடிக்கையான காரணங்களையெல்லாம் கூறிக்கொண்டிருந்தார்கள். ஆனால், உண்மையான வரலாறு என்ன?

தொடரும்

திருப்பூரில் தெருமுனைக் கூட்டங்கள்!

தந்தை பெரியாரின் 148 வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் மாவட்டக் கழகம் சார்பாக காரைக்குடி மாநாட்டு தீர்மானங்கள் விளக்க தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. தெருமுனைக் கூட்டங்கள் அக்டோபர்-15,16 ஆகிய 2 நாள்களில் 4 இடங்களில் நடைபெற்றன.

முதல் நாள் : 15.10.2026 வியாழன் மாலை 3.00 மணி அளவில் வீரபாண்டி, கொளத்துப்பாளையம் (பல்லடம் சாலை), இடுவம்பாளையம் ஆகிய பகுதிகளில் நடைபெற்றது. தெருமுனைக் கூட்டத்தில் கழக சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன், மாநகர அமைப்பாளர் முத்து,தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் வீ.சிவகாமி ஆகியோர் கருத்துரையாற்றினர். கழகப் பொருளாளர் துரைசாமி நிறைவுரையாற்றினார். தோழர் குணா, வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், ஆறுமுகம் ஆகியோர் நன்றியுரையாற்றினர். தொடக்கமாக தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் யாழினி பெரியார் குறித்த பாடல் பாடினார். மாவட்டத் தலைவர் முகில் இராசு, மாநகரச் செயலாளர் மாதவன், தெற்குப் பகுதி அமைப்பாளர் ராமசாமி, தோழர்கள் அமுதா, பெரியார் பிஞ்சு பிரனேசு ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



இரண்டாம் நாள் : 16.10.26 வெள்ளி மாஸ்கோ நகர், பகுதியில் மாலை 05.30 மணிக்கு தெருமுனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநகரச் செயலாளர் மாதவன் தலைமை தாங்கினார். தோழர் யாழினி பாடல் பாடினார். மாவட்டத் தலைவர் முகில் இராசு, மாநகர அமைப்பாளர் முத்து ஆகியோர் உரையாற்றினார்கள். கழகப் பொருளாளர் துரைசாமி நிறைவுரையாற்றினார். மடத்துக்குளம் ஒன்றிய அமைப்பாளர் கடத்தூர் ஐயப்பன் நன்றி கூறினார். நிகழ்வில் மாநகரத்துணைத் தலைவர் மாரிமுத்து, குணா,ஆறுமுகம், ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தோழர் அ.செ.வீரபாகு முதலாம் ஆண்டு நினைவு நாள்!

திருப்பூர் கழகத் தோழர் தனபால் அவர்களின் தந்தை வீரபாகு அவர்களின் நினைவேந்தல் கூட்டம் 25.10.2026 ஞாயிறு பிற்பகல் 1.30மணியளவில் திருச்சி மணப்பாறை, கீழையூர் கிராமம் அனந்தனூர் இல்லத்தில் நடைபெற்றது. திமுக தலைமைக் கழகப் பேச்சாளர் துரைகாசிநாதன் தலைமை தாங்கினார். வீரபாகு குடும்பத்தினர் அஞ்சம்மாள் வீரபாகு, அன்பழகன், சசிகலா, கவிதா, இளையராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். வீரபாகு அவர்களின் படத்தை கழகப் பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால்.பிரபாகரன் திறந்து வைத்தார். தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி புகழ் வணக்கம் செலுத்தி முழக்கமிட்டார்.

நினைவேந்தல் உரை நிகழ்த்தியவர்கள் சிபிஅய் ஒன்றியச் செயலாளர் ராஜேந்திரன், தி.க நகரச் செயலாளர் சி.எம்.ரமேஷ், விசிக மாவட்டச் செயலாளர் சக்திவேல், திமுக மாவட்ட பிரதிநிதி பந்தல் முருகேசன், கண்ணுச்சாமி (ரயில்வே ஓய்வு), பாய் வியாபாரி பொன்னுச்சாமி திமுக, தலைமைக்குழு உறுப்பினர் மனோகரன், கழக மாவட்ட அமைப்பாளர் ஆற்றல் அரசு, கழகத் தோழர்கள் அனந்தானூர் முருகேஷ், மேலூர் சத்தியமூர்த்தி, கோவிந்தசாமி (வனத்துறை ஓய்வு) ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி ஆகியோர் நினைவேந்தல் உரை நிகழ்த்தினார்கள். நிகழ்வில் திருச்சி அரசெழிலன் இணையர், கார்த்திக், நடுப்பட்டி பாலசுப்பிரமணி, இருதயராஜ் தி.ந.கழகம் மணப்பாறை ஆகியோர் கலந்துகொண்டார்கள். திருப்பூர் மாநகரத் தலைவர் தனபால் நன்றி கூறினார்.

வாசகர் கடிதம்

புரட்சிப் பெரியார் முழக்க இதழில் 'தேர்தல் ஆணையத்தின் கடந்த கால வரலாறு' பற்றிய செய்தி மிகவும் சிறப்பு. பெண்கள் கணவர் பெயரையோ தங்கள் வீட்டில் உள்ள மூத்த ஆண்கள் பெயரையோ சொல்லாமல் இருந்ததற்காக அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்காமல் இருந்தார்கள் என்ற செய்தி வியப்பாக இருக்கிறது. ஞானேஷ்குமாரின் இன்றைய அட்டூழியங்கள் இதில் அம்பலப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டில், கோயில் கதவின் பூட்டை உடைத்து ஜாதி ஆதிக்கவாதிகளை தீண்டாமை வழக்கில் பதிவு செய்து சிறையில் அடைத்து நடவடிக்கை எடுத்திருப்பது வீரமிக்க செய்தி! ஆயுத பூஜை குறித்து அண்ணாவின் கேள்விகள் சிந்திக்க தூண்டுகிறது. "சரஸ்வதி பூஜை- ஆயுத பூஜை ஆபாசங்கள்" என்ற தலைப்பில் வெளிவந்த பெரியாரின் கட்டுரையை படித்து எனது நண்பர் பாராட்டினார்.

மு.சாமிநாதன் (குமாரபாளையம்)

காவலாண்டியூரில் ஜாதி மறுப்பு மணவிழா



சேலம், சங்ககிரி வட்டம், ஐயங்கரட்டூர், தனபாலன்-ரேணுகாதேவி அவர்களின் மகள் ரம்யா என்பவருக்கும், சேலம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் பால்ராஜ்-வெண்ணிலா அவர்களின் மகன் தமிழரசன் என்பவருக்கும் 26/10/2026, திங்கள் கிழமை காவலாண்டியூர் பெரியார் படிப்பகத்தில் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன் தலைமையில் ஜாதி மறுப்பு மற்றும் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களை மணமக்கள் சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றனர்.

கழக ஏட்டுக்கு நன்கொடை

கோவையச் சார்ந்த மறைந்த தோழர் செங்குட்டுவன் மகன் பெர்ட்ரண்ட் ரஸல் ரூ.15,000 கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்துக்கு நன்கொடை வழங்கினார்.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆசிரியர்).

கீதா-நவீன்குமார் சுயமரியாதை இணையேற்பு விழா



சன் குழும ஊடகவியலாளர்கள் கீதா-நவீன்குமார் சுயமரியாதை இணையேற்பு விழா அக்-25 அண்ணா நகர் ஷிசெல் உணவகத்தில் நடைபெற்றது. சிபிஅய் முன்னாள் மாநிலச் செயலாளர் முத்தரசன், சிபிஎம் மாநிலச் செயலாளர் சண்முகம், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி (திமுக) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். காசு. நாகராசன் வரவேற்புரை ஆற்றினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்று இணையேற்பை நடத்தி வைத்தார். தோழர் தினேஷ் தொகுத்து வழங்கினார். ஊடகவியலாளர்கள் குணசேகரன், நெல்சன் சேவியர், பாரதி செல்வா, சென்னை பிரஸ் க்ளப் பொதுச் செயலாளர் ஆசிஃப், மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் அற்புதம் அம்மாள், பேரறிவாளன், சிபிஎம் செல்வா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

கழிவுநீர்த் தொட்டி மரணங்களுக்கு முடிவு இல்லையா?

தேசிய அளவில், 2016-20 காலக்கட்டத்தில் நிகழ்ந்த கழிவுநீர்த் தொட்டி மரணங்களின் பட்டியலில், முதல் இடத்தில் மகாராஷ்டிரத்துடன் தமிழ்நாடும் இருப்பதாகத் தூய்மைப் பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தின் அறிக்கை தெரிவித்திருப்பது வேதனை அளிக்கிறது.

மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் செயல் கொடியது எனத் தீர்மானித்து அதைத் தடைசெய்யும் சட்டம் இந்தியாவில் பிறப்பிக்கப்பட்டுக் கால் நூற்றாண்டு கடந்துவிட்டது. கழிப்பறைகளில் மட்டுமன்றித் திறந்த சாக்கடைகள், குழிகள், ரயில் தண்டவாளங்கள் முதலான இடங்களில் மனிதக் கழிவுகளை மனிதர்கள் தங்கள் கைகளால் சுத்தம் செய்தல், சுமந்து சென்று அகற்றுதல் போன்றவற்றுக்கும் 2013இல் தடை விதிக்கப்பட்டது. இவற்றைச் செய்ய நிர்ப்பந்திப்பவர்கள் பிணையில் வெளிவர முடியாத குற்றம் இழைத்ததாகக் கருதப்படுவார்கள் எனவும் இச்சட்டம் அறிவித்தது.

இத்தனைக்கும் பிறகும், பாதுகாப்புக் கருவிகள் இன்றித் தொழிலாளர்களைச் சாக்கடை சுத்தம் செய்யப் பணியமர்த்தும் போக்கு ஒழியவில்லை. மனிதக் கழிவுகள் தேங்கும் கழிவுநீர்த் தொட்டிகள் அல்லது நிலத்தடிக் கழிவுநீர்ச் சாக்கடைகளைச் சுத்தம் செய்யும்போது, அதிலிருந்து வெளியேறும் நச்சு வாயுக்களால். மூச்சுத்திணறல் ஏற்பட்டுத் தொழிலாளர்கள் உயிரிழக்கும் துயரம் தொடர்கதையாக நீடிக்கிறது.

நாடாளுமன்றத் தரவுகளின்படி நாடு முழுவதும் உள்ள 18 மாநிலங்கள், ஒன்றிய ஆட்சிப் பகுதிகளில் 2021 ஜனவரி 1 முதல் 2026 ஜூன் 30 வரையிலான காலகட்டத்தில் 332 தூய்மைப் பணித் தொழிலாளர்கள் பணியின்போது மரணம் அடைந்துள்ளனர். தூய்மைப் பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தின் தரவுகளின்படி, 2018-2026 காலக்கட்டத்தில் இத்தகைய மரணங்கள் நிகழ்ந்ததில் தமிழ்நாடும் மகாராஷ்டிரமும் தலா 100 மரணங்களுடன் தேசிய அளவில் முதலிடம் பிடித்துள்ளன. இந்தப் பட்டியலில் உத்தரப் பிரதேசத்தில் 98. குஜராத்தில் 86. ஹரியானாவில் 85 கழிவுநீர்த் தொட்டி மரணங்கள் நிகழ்ந்துள்ளன. தேசிய இயந்திரமயமாக்கப்பட்ட தூய்மைப் பணிச் சுற்றுச்சூழல் அமைப்பின் தரவுகளின்படி, இந்தியாவில் தூய்மைப் பணியில் ஈடுபடுவோரில் 70% பட்டியல் ஜாதியினர் பழங்குடியினர். 10% ஓபிசி பிரிவினராக உள்ளனர்.

மனிதர்களைக் கழிவுநீர்த் தொட்டிகளில் இறக்குவது பிணையில் வெளிவர முடியாத தண்டனைக்கு உரிய குற்றமாகச் சட்டம் வரையறுத்தாலும், களத்தில் அது எதிரொலிக்கவில்லை. ஒப்பந்த முறையில் தொழிலாளர்கள் சட்டவிரோதமாக இதில் ஈடுபடுத்தப்படுவதால், உண்மையான குற்றவாளிகள் தப்பித்து விடுகின்றனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குரிய மறுவாழ்வு நிதியும் முறையான இழப்பீடுகளும் பல சந்தர்ப்பங்களில் தாமதப்படுத்தப்படுவதும், ஒன்றிய-மாநில அரசுகள் ஒதுக்கும் நிதித் தொகை களத்தில் தூய்மைப் பணியாளர்களின் பாதுகாப்புக்காக முழுமையாகச் சென்றடையாததும் தொடர் குற்றச்சாட்டுகளாக உள்ளன.

இந்தப் பிரச்சினை தொடர்பாக அரசியல் தலைவர்கள் முன்னெடுக்கும் சில அடையாள அரசியல் நிகழ்வுகள் விளம்பரத்துக்கு மட்டுமே பயன்படுகின்றன. இத்தொழிலாளர்களுக்கு நிரந்தர வாழ்வாதாரப் பாதுகாப்பு வழங்குவதையோ, கழிவுநீர்த் தொட்டி மரணங்களை முழுமையாகத் தடுத்து நிறுத்துவதையோ அவை உறுதிசெய்வதில்லை. டிஜிட்டல் வளர்ச்சி, தொழில்நுட்பப் புரட்சி எனப் பெருமிதம் கொள்ளும் காலத்திலும் மனிதர்களைக் கழிவுநீர்த் தொட்டிக்குள் இறக்கிவிடும் அவலத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தபாடில்லை.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : November 05, 2026

Owned and Published By : K. Rajendran (Editor), From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.

Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776